**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 21 / 2023**

**வா.சா.1 – சிக்கந்தர் ஹயாத்கான்** **16.04.2026**

**1, 5 மற்றும் 2 முதல் 4 மற்றும் 6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்து திருவேங்கடம் கிராமம் திருவள்ளூர் குரூப்பில் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கே கீழாயூர் குரூப் உள்ளது. தாவா சர்வே எண் 26/7ன் மொத்த விஸ்தீரணம் 74 செண்டு ஆகும். எனது தகப்பனார் சர்வே எண் 26/7 ல் தென்புறம் உள்ள 37 செண்டை கிரையம் வாங்கியுள்ளார். நான் எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 26/7ல் பாக்கி உள்ள 38 செண்டையும் எனது தகப்பனார் தான் கிரையம் வாங்கியுள்ளார். எனது தகப்பனார் 1961ல் அந்தோணிமுத்து நாடார் மற்றும் அருளம்மாள் என்பவர்களிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1ல் கண்ட சொத்திற்கு தெற்கே எனது தகப்பனார் கிரையம் வாங்கிய 38 செண்டு உள்ளது. அந்த 38 செண்டை எனது தகப்பனார் அந்தோணிமுத்து நாடாரின் பங்காளிகளிடம் கிரையம் வாங்கியுள்ளார். அந்த பங்காளிகள் யார் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை எனது தகப்பனார் 1960ல் கிரையம் வாங்கியுள்ளார். அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. சர்வே எண் 26/7ன் மொத்த விஸ்தீரணம் 74 செண்டும் எனது தகப்பனாருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டதாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் எங்கள் பங்காளிகள் வகையறா புஞ்சைக்கும் தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எங்கள் பங்காளிகள் என்பது ஆரோக்கியநாடார், அருளாந்து ஆகியோர்களை குறிக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எங்கள் பங்காளிகள் என்பது அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தவர்களின் சித்தப்பா, பெரியப்பா மக்கள் ஆவார்கள். எனது தகப்பனார் 1960ம் ஆண்டே தாவா சொத்தில் 38 செண்டை கிரையம் வாங்கியதாக எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை

என்றால் சரிதான். எனது தகப்பனார் 1960ல் தாவா சொத்தில் வடக்கு பகுதியை கிரையம் வாங்கவில்லை என்பதால் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனாரின் பெயரை நான்குமாலில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தங்களுடைய புஞ்சைக்கும் கிழக்கு எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது எனது தந்தை ஆவார். சர்வே எண் 26/7ற்கு மேல்புறம் சர்வே எண் 26/6 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 26/6 யை நான் 2006ம் வருடம் கிரையம் வாங்கினேன். சர்வே எண் 26/6 ல் தான் நான் பிளாட்டுகளாக போட்டுள்ளேன். சர்வே எண் 26/5 தங்கையா வகையறாவிற்கு பாத்தியப்பட்டது ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பாத்தியப்பட்டதை தவிர சர்வே எண் 26/7ல் எனக்கோ எனது தகப்பனாருக்கோ எனது சகோதரர்களுக்கோ வேறு பாத்தியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாங்கிய வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள சொத்து விபரத்தை தான் நான் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வா.சா.ஆ.1ன் படி கிரையம் வாங்கிய சொத்தில் 10.01.1975ல் தேவரக்கம், ஜெயமணி ஆகியோருக்கு 19 செண்டை சர்வே எண் 26/7பி என குறிப்பிட்டு எனது தகப்பனார் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 10.01.1975ல் சர்வே எண் 26/6, 26/3ஏ, 26/7பி என 3 சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நானும் எனது மூத்த சகோதரர் சிக்கந்தர்பாபாவும் சேர்ந்து 27.02.2003ல் சர்வே எண் 26/7பி– யில் 18 1/2 செண்டை ஏஞ்சல்பிரைட் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நானும் எனது சகோதரரும் ஏஞ்சல்பிரைட்டுக்கு கிரையம் கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். எனது தகப்பனார் தேவஇரக்கம், ஜெயமணி ஆகியோருக்கு 1975ல் கிரையம் கொடுத்த பத்திரத்தில் உள்ள சர்வே எண் 26/7பி தவறு என்று 01.12.2005ல் நான் ஒரு சீர்திருத்த பத்திரம் அவர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

அந்த சீர்திருத்த பத்திரத்தில் சரியான சர்வே எண் 27/7ஏ2 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் கொடுத்த பத்திரம் நானும் எனது சகோதரரும் கிரையம் கொடுத்த பத்திரம் நான் எழுதிக்கொடுத்த சீர்திருத்தப்பத்திரம் ஆகியவற்றை இந்த வழக்கில் சொல்லவில்லை அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் அவை இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாத பத்திரங்கள் ஆகும். வழக்கிற்கு சம்மந்தமான ஆவணங்கள் என்ன தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன், எஸ்.எல்.ஆர், பட்டா மற்றும் வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்களுக்கு பூர்வீக சொத்து அல்ல எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். சர்வே எண் 26/7 பல உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொத்து விபரத்தில் முழு சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 புல வரைபடத்தில் சர்வே எண் 26/7ஏ1, 26/7ஏ2, 26/7பி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 26/7ஏ1 என்பது தற்போது 26/7ஏ1ஏ மற்றும் 26/7ஏ1பி ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 26/7ஏ1பி என்பது தற்போது 26/10, 26/11 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 26/7ஏ1ஏ, 26/10, 26/11 ஆகியவற்றில் எனக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். சர்வேஎண் 26/7ஏ1ஏ என்பது 2 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலும் சர்வே எண் 26/10 1ம் பிரதிவாதி அருள்சாமி பெயரிலும் சர்வே எண் 26/11 6ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா உள்ளது என்றால் அது தவறாக பட்டா ஏற்பட்டுள்ளது. அவர்கள் பெயரில் பட்டா உள்ளதை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் நான் ஆட்சேபனை செய்துள்ளேன். நான் வருவாய் துறையில் மனு கொடுத்தேன். நான் எனது அப்பா கிரையம் வாங்கிய 37 செண்டில் ஒரு

பகுதியை எனது தகப்பனார் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும் மீதியை நானும் எனது சகோதரரும் கிரையம் கொடுத்துவிட்டு அதை மறைத்து சம்மந்தமில்லாமல் சர்வே எண் 26/7ன் வடபகுதியை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தின் உட்பிரிவுகளை சொல்லாமல் அதை மறைத்து முழு சர்வே எண்ணை குறிப்பிட்டு தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏஞ்சல்பிரைட்டுக்கு நானும் எனது சகோதரரும் எழுதிக்கொடுத்த சொத்திற்குரிய கிரைய தொகையை எனது சகோதரர் பெற்றுக்கொண்டார். தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாததால் தான் எனது அண்ணன் என்னுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றால் சரியல்ல. ஏஞ்சல் பிரைட் கிரையம் வாங்கிய சொத்தில் அவர் கட்டிய வீடு உள்ளது. சர்வே எண் 26/7 ன் தென்பகுதி என வழக்கு தாக்கல் செய்துவிட்டு அதற்கு உரிமையுள்ள ஏஞ்சல்பிரைட், தேவஇரக்கம், ஜெயமணி ஆகியோரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் அனைவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் அவர்கள் சொத்தில் முள்கம்பிவேலி போட்டுள்ளார்களா என்றால் வேலி போட்டுள்ளார். அந்த வேலிக்கு கீழ்புறம் தான் 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து செட்டு போட்டுள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த செட்டு என்பது கடை ஆகும். அந்த கடைக்கு கிழக்கே 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது. 20 வருடங்களுக்கு மேலாக அந்த வீடு உள்ளது. அந்த வீடு கட்டியபோது எனது தகப்பனார் உயிருடன் இல்லை. 1ம் பிரதிவாதி வீடு கட்டியபோது அவருடைய சொத்தாக இருக்கும் என்று நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை. 1ம்

பிரதிவாதியிடமிருந்து தான் 6ம் பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு தான் சர்வே எண் 26/11 என அவரது பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் சர்வே எண் 26/10 என 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் ரத்து செய்யக்கோரியுள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்துக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகள் சொத்திற்கும் இடையே முள்கம்பி வேலி உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் மற்றும் நான்குமால் தவறாக உள்ளது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருந்தும் ஆணையர் நியமனம் செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் 20 வருடத்திற்கு மேல்இருக்கக்கூடிய வீட்டையும் நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் எனது சொத்து தனியாக இருப்பதும் 1ம் பிரதிவாதியின் சொத்து தனியாக இருப்பதும் 2 முதல் 4 பிரதிவாதிகள் சொத்து தனியாக இருப்பதும் தெரிந்து விடும் என்பதால் தான் நான் ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சர்வே எண் 26/7ல் தென்பகுதியில் உள்ள பகுதிக்கு தான் நான் வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்துள்ள சொத்துக்களின் ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, தாவா சொத்து வருவாய் துறையில் புஞ்சை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் கொடுத்த பத்திரங்களில் தவறான நான்குமாலை குறிப்பிட்டு கிரையம் கொடுத்து விட்டு தகவறாக தாவா சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 27/6ல் தென்பகுதியை கிரையம் வாங்கி அதை விற்பனை செய்துவிட்டு தவறாக வடபகுதிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

எந்தவித முகாந்திரமும் இல்லாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளை அலைக்கழிவு செய்துள்ளதால் நான் பிரதிவாதிகளுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கே கிழமேல் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். சரியான பாத்திய அனுபவத்தின் அடிப்படையிலும் உரிமைமூல ஆவணங்களின் அடிப்படையிலும் தான் 1ம் பிரதிவாதியிடமிருந்து 6ம் பிரதிவாதி 23.04.2020 அன்று தாவா சொத்தின் ஒரு பகுதியான 5 செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. அந்த எதிர்வழக்குரையில் 6ம் பிரதிவாதி தனது மனைவி சைபுநிஷாவிற்கு 16.03.2023 அன்று தான் கிரையம் வாங்கிய 5 செண்டை ஏற்பாட்டு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்திகொடுத்துவிட்டார் என்ற விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கு எதிராக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**